**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**

**சென்னை-06**

**ந.க. எண். 4276/ஆ4/2019, நாள்: 06.08.2019**

**பொருள்:** பள்ளிக்கல்வி- 2019-2020 ஆம் கல்வியாண்டு- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மேல்நிலை கல்வி பயிலும் மாணவர்கள்- NEET மற்றும் JEE போட்டித் தேர்வுகளுக்கு திறம்பட தயார் செய்யும் பொருட்டு வாரந்தோறும் அவரவர் பள்ளிகளிலேயே குறுந்தேர்வுகள் நடத்துதல்- தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தல்- சார்ந்து.

**பார்வை: தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.க. எண். 26456/கே/இ3/2019, நாள்: 08.07.2019 மற்றும் 31.072019**

---

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு,அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் NEET மற்றும் JEE போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கும்படி தெரிவிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலை அனுப்பாத தலைமையாசிரியர்கள் உடனடியாக குறுந்தகடு மற்றும் மின் அஞ்சலில் (velloreceo@gmail.com) அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**NEET மற்றும் JEE பயிற்சி வகுப்புகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 07.08.2019 (புதன்கிழமை) இன்று தகுதி தேர்வு அவரவர் பள்ளிகளில் நடத்தப்பட வேண்டும் தகுதித் தேர்விற்கான வினாக்கள் விடைக் குறிப்புடன் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.**

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை 09.08.2019 அன்று மாலை 4.00 மணிக்குள் குறுந்தகடு மற்றும் velloreceo@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இணைப்பு : தேர்வுக்கான வினாத்தாள்
மற்றும் விடை

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு/நகரவை/வனத்துறை/ஆதிதிராவிடர் நல/
அரசு நிதியுதவி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
நகல்
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்